# பாடம் 22: இயேசுவின் எய்துபணி
# (சொந்த மக்களின் புறக்கணிப்பு)

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

அடிப்படை நிலை (7 வயது) : 1 முதல் 8, 11 கருத்துகளைக் கற்பிக்கவும்
இடைப்பட்ட நிலை (10 வயது) : 1 முதல் 9, 11 கருத்துகளைக் கற்பிக்கவும்
மேம்பட்ட நிலை (13 வயது) : 1 முதல் 11 கருத்துகளைக் கற்பிக்கவும்

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**

முந்திய பாடத்தில், இயேசு 30 வயதில் கடவுளின் அரசின் வருகை குறித்த போதனையோடு தமது பொது திருப்பணியைத் தொடங்கினார் என்பதை நாம் கற்றோம். அவரது திருப்பணி முழுவதும் இதுவே அவர் வழங்கிய முக்கியச் செய்தியாக இருந்தது. இந்த பாடத்தில், இயேசுவின் செய்தி எப்படி தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டது, மேலும் கடவுள் அனுப்பிய மீட்பரான அவர் தமது சொந்த மக்களால் இறுதியாகப் புறக்கணிக்கப்பட்டது ஏன் என்பதைப் பற்றி நாம் கற்போம்.

**தற்போதைய பாடம்:**

1. இயேசு மிகக் குறிப்பான ஓர் எய்துபணிக்காக, அதாவது கடவுளின் அரசை அல்லது விண்ணரசை நிறுவ வந்தார். அவ்வாறு செய்ய, அவர் "தமது மக்களை அவர்களின் பாவங்களில் இருந்து மீட்க" (மத் 1:21) வேண்டும். ஆனால் இந்த மீட்பரின் வருகையைப் பெருமகிழ்ச்சியோடு ஏற்பதற்குப் பதிலாக, கடவுள் வாக்களித்த மெசியாவாக அவரை ஏற்க அவர்களால் இயலவில்லை. அவர்கள் எதிர்பார்த்திருந்த மெசியாவாக இயேசுவை அவர்கள் ஏற்க முடியாததற்கு பல காரணங்கள் இருக்கின்றன.

2. மெசியா அரசியல் செல்வாக்குள்ள மற்றும் வலிமையான நபராக இருக்க வேண்டுமென அவர்கள் எதிர்பார்த்தனர், ஏனெனில் செல்வம், செல்வாக்கு, மற்றும் வலிமையான மனிதரே அரசராக இயலும். அவர்களின் எதிர்பார்ப்பின்படி, இந்த மெசியா அந்நாள்களில் யூத சமூகத்தில் மக்களிடையே செல்வாக்குள்ள இரு வகுப்பினரைச் சார்ந்து ஒரு பரிசேயராக அல்லது ஒரு சதுசேயராக இருக்க வேண்டும். (பரிசேயர் மற்றும் சதுசேயர் என்ற இந்த இரு வகுப்பு மக்களும், இயேசுவைப் பிடிப்பதில் சேர்ந்து செயல்பட்டாலும், ஒருவர் மற்றவருக்கு எதிரானவர்கள்.)

*சதுசேயர்கள்* என்போர் உயர் வகுப்பினரான, செல்வமுள்ள மக்கள். அவர்கள் முக்கியமாக குருக்களாகவும் உயர்குடியினராகவும் இருந்தனர். எருசலேம் கோவிலின் தலைமைக் குருக்கள் இந்தப் பிரிவில் இருந்தே வந்தனர். சதுசேயரே எருசலேம் கோவிலைக் கட்டுப்படுத்தினர். இஸ்ரயேல் தற்போது ரோமை ஆட்சியின் கீழுள்ளது என்ற உண்மையை அவர்கள் ஏற்றுக் கொண்டனர், மேலும் அமைதியை நிலைநாட்டவும் லாப நோக்கங்களுக்காகவும் அவர்கள் ரோமை அதிகாரிகளோடு தோள் சேர்த்துக்கொண்டனர்.

*பரிசேயர்கள்* என்போர் பேரியக்கமாக, பொது மக்களாக இருந்தனர், கடவுளோடு செய்துகொண்ட உடன்படிக்கையின் தூய்மையை இஸ்ரயேல் கைவிட்டதாலும், கடவுளின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதிலும் அறநெறிகளிலும் குறைவுபட்டு இருந்ததாலும் அவர்கள் கவலையுற்றிருந்தனர். பெரிதும் பொது மக்களாக இருந்ததால், பரிசேயர் தங்களை மற்றவர்களிடம் இருந்து பிரித்துக் கொண்டு, அறநெறி எடுத்துக்காட்டை அமைத்து மற்றவர்கள் மீது திணித்தனர். பழமைவாத மக்களாக இருந்த அவர்கள், இஸ்ரயேல் முழுவதும் இருந்த தொழுகைக்கூடங்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். அவர்கள் ரோமை அதிகாரிகளுடன் சமரசம் செய்து கொண்ட சதுசேயர்களை மோசமானப் பாவிகளாகக் கருதினர். கடவுளின் சட்டங்களை நேர்த்தியாகக் கடைபிடிக்கும் மக்கள் என்றும் பரிசேயர்கள் தங்களைப் பற்றிப் பெருமிதம் கொண்டனர், ஆனால் இந்த தன்-ஏற்புடைமை போலியானதாக இருந்தது.

பரிசேயர்கள் சட்டத்தைக் கடைபிடிப்பதை மிகவும் வற்புறுத்தினர், அதாவது பத்துக் கட்டளைகளை அவர்கள் 613 கட்டளைகளாக (எபிரேயத்தில்: மித்ஸ்வோட்) விரிவுபடுத்தி வைத்திருந்தனர். மித்ஸ்வோட் என்பவை யூத மக்கள் செய்யத் தகுந்த மற்றும் செய்யத் தகாதவற்றை உள்ளடக்கியச் சட்டம் மற்றும் அறநெறிக் கூற்றுகளாகவும் விதிகளாகவும்

இருந்தன. இந்த மித்ஸ்வோட்களைக் கீழடக்கும் முக்கிய வகைமையாக பத்துக் கட்டளைகள் பார்க்கப்பட்டன. (மெய்மையில், பத்துக் கட்டளைகளின் எந்த வகைமையின் கீழும் பல மித்ஸ்வோட்களை வைப்பது கடினம்.) 613 மித்ஸ்வோட்களின் சுமை போதாதென்று, காலந்தோறும் பல விதிகள் அவற்றோடுச் சேர்க்கப்பட்டன. அதன் காரணமாகவே பரிசேயர் மற்றும் தம் காலத்திய சமயத் தலைவர்களைச் சாடினார். இயேசுவின் செயல்களும் படிப்பினைகளும் அவர்களது நிறுவப்பட்ட சட்டங்கள், நம்பிக்கைகள், மற்றும் நடைமுறைகளை எதிர்க்கின்றவராக அவரைக் காட்டின. உண்மையில், அவர் அவற்றைத் தொடர்ந்து கண்டித்தார்.

பரிசேயர்கள் இந்தச் சட்டங்களை மக்கள் மீது திணித்ததாலும், இந்தச் சட்டங்களின் கடும் நிபந்தனைகளைப் பின்பற்ற இயலாத மக்களை விண்ணகத்திற்கு தகுதியற்றவர்கள் என்று தீர்ப்பிட்டதாலும் இயேசு அவர்களை எதிர்த்தார். மனிதர்கள் உருவாக்கிய கட்டளைகளை அல்ல, கடவுள் வழங்கியப் பத்துக் கட்டளைகளை நிறைவேற்றவே இயேசு வந்தார் (மத் 5:17-18) என்பதே உண்மை.

3. இயேசு சட்டத்தை அழிக்க அன்று, அதை நிறைவேற்றவே வந்தார் (மத் 5:17). அவர் சட்டத்தில் முழு பொருளையும் நோக்கத்தையும் நிறைவேற்ற வந்தார். இயேசுவின் சட்ட நிறைவேற்றம் பழைய ஏற்பாட்டு இறைவாக்கினர்களால் முன்நிழலாகக் காட்டப்பட்டுள்ளது. அவர்கள் மெசியாவால் நிறுவப்படும் புதிய உடன்படிக்கை பற்றி பேசியுள்ளனர். அவர் தமது ஆவியை அவர்களுக்குள் வைப்பார், கல்லான இதயங்களை சதையாலான இதயங்களாக மாற்றுவார். பின்னர் அவர்கள் உண்மையில் அவரது மக்களாக இருப்பர், அவரது சட்டங்கள் மற்றும் கட்டளைகளை உண்மையாகப் பின்பற்றுவர்.

4. பரிசேயர்கள் மிகவும் புண்படும் வகையில் இயேசு அடிக்கடி செய்த ‘‘விதிமீறல்களில்’’ ஒன்று, ஓய்வுநாளில் மக்களை நலமாக்கியது. ஓய்வுநாளில் தடுக்கப்பட்டவை குறித்த கடும் நிபந்தனைகளைப் பரிசேயர்கள் கொண்டிருந்தனர். அவை எழுதுதல், அழித்தல், மற்றும் கிழித்தல்; வணிகப் பரிமாற்றங்கள் செய்தல்; பொருட்கள் வாங்குதல்; சமைத்தல், சூடாக்குதல், அல்லது நெருப்பு பற்றவைத்தல்; தோட்ட வேலை; துணி துவைத்தல்; பொது இடத்தில் ஆறடியை விட நீளமானதைச் சுமத்தல்; எதையும் கையால் நகர்த்துதல், நேரடியாக அன்றி (துடைப்பத்தால்) கூட: உடைந்த கிண்ணம், சாடியில் உள்ள மலர்கள், மேசை மீது மெழுகுவர்த்திகள், சமைக்காத உணவு, பாறை, கீழே விழுந்த பொத்தான் (நீங்கள் இந்தப் பொருட்களை முழங்கையால் அல்லது மூச்சுக்காற்றால் நகர்த்தலாம், ஆனால் கைகளால் கூடாது). மேலும் இது பகுதியளவு பட்டியல் மட்டுமே! ஆகவே இயேசு ஓய்வுநாளில் நலம் அளித்ததை ‘‘வேலை’’ செய்ததாக அவர்கள் வரையறுத்தனர். இதன் காரணமாகவே, இயேசு வேண்டுமென்றே ஓய்வுநாளில் மக்களை நலமாக்கி வந்தார்!

ஒரு மனிதரிடம் இருந்து தீய ஆவியை விரட்டினார் (மாற் 1:21-28; லூக் 4:31-37)
பேதுருவின் மாமியாரை நலமாக்கினார் (மத் 8:14-15; மாற் 1:29-31; லூக் 4:38-39)
கை சூம்பிய மனிதரை நலமாக்கினார் (மத் 12:9-13; மாற் 3:1-6; லூக் 6:6-11)
பெத்சதா குளத்தில் முடமான மனிதரை நலமாக்கினார் (யோவா 5:1-18)
கூன்முதுகுள்ளப் பெண்ணை நலமாக்கினார் (லூக் 13:10-17)
நீர்க்கோவை நோயுள்ள மனிதரை நலமாக்கினார் (லூக் 14:1-6)
பிறவிலேயே பார்வையற்ற மனிதரை நலமாக்கினார் (யோவா 9:1-7,14)

5. அதனோடு, இயேசு மற்ற மித்ஸ்வோட்களை மீறியும் ‘‘குற்றம்’’ செய்தார். அதற்கு சில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

*பார்வையற்ற மனிதரை நலமாக்குதல்* (யோவா 9:1-7,14). இயேசு நிலத்தில் துப்பி சேறு உண்டாக்கியது பல ஓய்வுநாள் சட்டங்களை மீறுவதாக இருந்தது. சேறு உண்டாக்குதல் ஓய்வுநாளில் ‘‘பிசைதலை’’ தடைச்செய்யும் சட்டத்திற்கு எதிரானது, மனிதரின் கண்கள் மீது அந்தச் சேற்றைத் தடவியது ஓய்வுநாளில் திருப்பொழிவுக்கு எதிரான சட்டத்தை உடைத்தது, இவை அனைத்துமே ‘‘வேலை’’ என்றத் தகுதியுடையவை.

*நல்ல சமாரியர் உவமை* (லூக் 10:25-37). நல்ல சமாரியர் உவமையில், குருவும் லேவியரும் எரிகோவில் வாழ்ந்தனர், இயேசுவின் காலத்தில் அங்கு 12,000 குருக்களும் லேவியரும் வாழ்ந்தனர். எருசலேமில் இருந்து எரிகோ செல்லும் வழி மிக கடினமான பாறை நிறைந்த சாலையாக இருந்தது. திருடர்கள் அங்கு நிகழ்த்திய கடும் துன்புறுத்தல்கள் காரணமாக அது

“குருதி வழி” என்றும் அழைக்கப்பட்டது. குருவும் லேவியரும் அந்தச் சாலையில் இறக்கும் நிலையில் இருந்த மனிதருக்கு அருகில் செல்ல முடியாத நிலையில் இருந்தனர், ஏனெனில் அந்த மனிதர் இறந்தால், இறந்த உடலைத் தொடுவது அவர்களைத் தீட்டானவர்களாக ஆக்கிவிடும். உண்மையில், அவர்கள் இறந்த உடலின் நிழலைக் கூடத் தொடக்கூடாது. ஆகவே, அந்த ஆபத்தைத் தவிர்க்கும் விதமாக சாலையின் மறுபக்கம் கடந்து செல்வது நல்லதாக இருந்தது. இறுதியில், மிகவும் காயப்பட்டிருந்த மனிதரை ஒரு சமாரியரே மீட்டார். ஆனால் இயேசுவின் காலத்தில், குருக்களும் லேவியருமே நல்லவர்களாகக் கருதப்பட்டனர், சமாரியர்கள் அல்லர்! (நாடுகடத்தலின் பொழுது யூதர்கள் மற்றும் அசீரியர்களுக்கு இடையே நிகழ்ந்த கலப்புத் திருமணத்தின் விளைவே சமாரியர்கள், அவர்களின் வேற்றுச் சமய நடைமுறைகள் மற்றும் அவர்களின் அசீரிய வழிமரபின் காரணமாக யூதர்களால் அவர்கள் வெறுக்கப்பட்டனர். இந்தப் பெரும் வெறுப்பு ஊடிடையாக இருந்ததால், காயமுற்ற ஒரு யூதரை ஒரு சமாரியர் மீட்பதும் மிகவும் அரிதானது.) ஒரு சமாரியரின் நன்மைத்தனத்தையும் ஒரு யூத குரு மற்றும் லேவியரின் கெட்டத்தனத்தையும் இந்த உவமையில் குறிப்பிட்டதால் இயேசு தவறானவராகக் கருதப்பட்டார்.

6. மித்ஸ்வோட் பற்றிய இயேசுவின் மதிப்பின்மை காரணமாக அவர் மீதான பரிசேயர்களின் வெறுப்போடு, இஸ்ரயேல் எதிர்பார்த்திருந்த மெசியா பிற இனத்தாருக்கன்றி இஸ்ரயேலருக்குச் சாதகமானவராக இருக்க வேண்டும். ஆயினும், இயேசு யூதர்களை விடவும் பிற இனத்தார் மீது அதிக கவனம் செலுத்தியதுடன், அவர்களுக்கு அதிகச் சலுகையும் வழங்கினார். பின்வரும் எடுத்துக்காட்டுகளை வாசியுங்கள்:

*கானானியப் பெண்* (மத் 15:22-28). இயேசு பிற இனத்தார் வாழ்ந்த தீர் மற்றும் சீதோன் பகுதிகளில் நுழைந்தார். ஒரு கானானியப் (சீரோபெனீசியப்) பெண் பேய்ப்பிடித்தத் தமது மகளை நலமாக்குமாறு அவரை அணுகிய பொழுது, இயேசு தமது எய்துபணி முதலில் “காணாமல் போன ஆடுகளாகிய இஸ்ரயேல் வீட்டாருக்குரியது” என இருமுறை விளக்கினார். சீடர்களும், இயேசு இஸ்ரயேலின் தேவைகளில் கவனம் செலுத்த வேண்டுமென்றே நினைத்ததாகத் தெரிகிறது. உதவிக்கான அப்பெண்ணின் கூக்குரலைக் கேட்டுக் களைத்துப் போன அவர்கள், அவளை அனுப்பி விடுமாறு அவரிடம் கூறினர். யூதர்கள் பெரும்பாலும் பிற இனத்தாரை அழைத்தது போன்று, அவர்களின் நிகழ்மை ஒரு யூதரைத் தீட்டானவர் ஆக்கும் என்பதால், அவள் ஒரு நாயின் நிலையில் இருந்ததை இயேசு விரும்பினார். அவளது விசுவாசத்தைச் சோதிக்க, அவள் தமது உதவியை எதிர்பார்க்க எந்தச் சட்ட உரிமையும் இல்லை என இயேசு சுட்டிக்காட்டினார். அவள் தனக்கு கீழே விழும் ஒரு துணுக்கே போதும் என்ற விருப்பத்தைத் தெரிவித்தாள், தன் மகளைப் பிடித்துள்ளப் பேயை விரட்ட இயேசுவிடம் இருந்து வரும் ஒரு துணுக்கே வல்லமையுள்ளது என்று அவள் அறிந்திருந்தாள். இந்தக் கதையைத் தொடர்ந்து வருகின்றப் பத்தியில், மறைநூல் அறிஞர்கள் மற்றும் பரிசேயர்களிடம் இருந்து வரும் சவால்களுக்கு தூய்மை மற்றும் தீட்டின் எல்லைகளை மறுகட்டமைத்து இயேசு பதிலிறுப்பதைக் கவனிக்கவும்.

*கிணற்றருகில் சமாரியப் பெண்* (யோவா 4:4-26). இயேசு வேண்டுமென்றே சமாரியாவுக்குள் நடந்து சென்று, (விபச்சாரியாக இருந்த) சமாரியப் பெண்ணிடம் பேசியதுடன், செய்யத்தகாத ஒன்றான அவர்களின் தண்ணீரைக் குடிக்கவும் கேட்டார். சமாரியர்கள் பாதி யூதர்களும் பாதி பிறஇனத்தாரும் இணைந்த கலப்பினத்தாராக இருந்ததால் யூதர்கள் அவர்களை வெறுத்தனர். வடக்கு அரசுகள் அசீரியர்களால் சிறைபிடிக்கப்பட்ட பொழுது, இவர்கள் அவர்களுடன் கலப்பு திருமணம் செய்து கொண்டு யூதேயாவின் வடக்கேயுள்ள சமாரியாவில் குடியமர்ந்தனர். இஸ்ரயேலரோடு கலப்பு திருமணம் செய்த வெளிநாட்டவர் சமாரியாவிலும் அதைச் சுற்றியும் இன்னும் இருந்தனர். இந்த “சமாரியர்கள்” முதலில் தங்கள் சொந்த நாடுகளின் சிலைகளை வழிபட்டனர், ஆனால் சிங்கங்களால் துன்புற்ற அவர்கள், அப்பகுதி கடவுளை மதிக்காததே அதற்கு காரணம் என்று கருதினர். ஆகவே யூத சமயத்தைக் கற்பிப்பதற்காக ஒரு யூத குரு அவர்களிடம் அனுப்பப்பட்டார். அவர்கள் மோசேயின் நூல்களில் இருந்து கற்பிக்கப்பட்டனர், ஆனால் தங்களது சிலை வழிபாட்டு வழக்கங்கள் பலவற்றையும் அவர்கள் கடைபிடித்தனர். அவர்கள் மோசேயின் நூல்களை மட்டுமே பெற்றனர், இறைவாக்கினர்கள் எழுதியவற்றையும் மற்றெல்லா யூத மரபுகளையும் அவர்கள் புறக்கணித்தனர். அவர்களின் சமயம் யூதம் மற்றும் சிலை வழிபாட்டின் கலவையாக இருந்தது (2அர 17:26-28). சமாரியர்கள் “கெரிசிம் மலை” மீது தங்களுக்கென ஒரு கோவிலைக் கட்டியெழுப்பினர், நாட்டினரின் வழிபாட்டுக்காக அந்த இடம் மோசேயால் குறிக்கப்பட்டதாக அவர்கள் கருதினர். சமாரியர்களின் தலைவரான சன்பலாற்று தமது மருமகன் மனாசெசை தலைமைக் குருவாக நியமித்தார். சமாரியர்களின் சிலை வழிபாட்டு சமயம் நிலைபெற்றது. யூதர்கள் எருசலேமுக்குத் திரும்பிய பொழுது,

பாரசீக நாடுகடத்தலின்போது நெகேமியாவின் கீழ் இரண்டாம் கோவிலைக் கட்டியெழுப்ப முயன்றனர். கோவிலின் இடத்தில் சமாரியர்கள் பன்றியின் குருதியை ஊற்றியதால் அவ்விடம் தீட்டுப்பட்டதை அடுத்து, அதை மீண்டும் தூய்மைப்படுத்த கோவில் கட்டும் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது (நெகே 6:1-14). தாங்கள் தூய இடமாகக் கருதியதை அவர்கள் தீட்டுப் படுத்தியதை யூதர்களால் ஏற்க முடியவில்லை; ஆகவே அவர்களை ரோமையார்களை விடவும் அதிகம் வெறுத்தனர். தூய்மையற்ற மக்களாகத் தாங்கள் நம்பிய சமாரியர்களைத் தவிர்க்கும் விதமாக, நீண்டப் பயணமாக இருந்தாலும், யூதர்கள் சமாரியாவுக்குள் செல்லாமல் புறம்பே தொலைவில் (பெரேயா வழியாக) தங்கள் வழியை அமைத்துக் கொண்டனர்.

*கோவிலின் பிறஇனத்தார் முற்றத்தைத் தூய்மையாக்கல்* (மத் 21:21-13, மாற் 11:15-17). ஆண்டவரின் பழைய உடன்படிக்கை மக்களின் மற்றத் தவறுதல்களோடு, பிறஇனத்தாரை அணுகி ஒரே உண்மை கடவுளை வழிபட அழைப்பதற்கான தங்களின் அழைப்பை அவர்கள் ஒருபோதும் நிறைவேற்றவில்லை. முதல் நூற்றாண்டில், இஸ்ரயேலின் கடவுளான யாவேயிடம் யூதரல்லாதோர் செபிப்பதற்கான 35 ஏக்கர் அளவிலான பிறஇனத்தார் முற்றத்தை எருசலேம் கோவில் கொண்டிருந்தது. எனினும், மெய்யாக பிறஇனத்தார் அங்கு வரவேற்கப்படவில்லை. எல்லா பிறஇனத்தாரின் கோவிலையும் மெசியா தூய்மையாக்குவார் என்ற எதிர்நோக்கே பரவலாக யூதர்களின் மனநிலையாக இருந்தது. இன்னுமாக, முதல் நூற்றாண்டு எருசலேமில் பிறஇனத்தார் முற்றத்திற்கு பிறஇனத்தார் வந்தபோது, அவர்களுக்கு எந்த வரவேற்பும் காத்திருக்கவில்லை. மாறாக, வழிபடுவோர் பலிக்காகக் கொணரும் விலங்குகளை விற்ற வணிகர்கள் மற்றும் ரோமை நாணயங்களை கோவில் வரி செலுத்துவதற்காக பேரரசரின் உருவம் பொறிக்காத செக்கேல்களாக மாற்றிக் கொடுக்கும் பணம் மாற்றுவோராலும் அந்த முற்றம் நிறைந்திருந்தது. முதல் நூற்றாண்டின் புகழ்பெற்ற யூத வரலாற்றாளரான யோசேப்புஸ், பாஸ்கா விழாவின்போது 255,600 ஆட்டுக்குட்டிகள் பலியிடப்பட்டதாகக் குறிப்பிடுகிறார், அது கோவிலில் வணிகர்களின் செயல்பாட்டை அளவிட நமக்கு உதவும் நற்கருத்தைத் தருகிறது. அங்கு மெய்யாக பிறஇனத்தார் ஆண்டவரை வழிபட எந்த இடமும் இல்லை. இதைக் கண்டு, இயேசு வணிகர்களையும் பணம் மாற்றுவோரையும் கோவிலில் இருந்து வெளியே துரத்தினார். பிறஇனத்தார் செபிப்பதற்கான கடவுளின் வடிவமைப்பை மீறி, அங்கு வணிகம் செய்வதற்கு அவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை. ‘‘கள்வர்களின் குகை’’ என்று அந்த இடத்தை அழைத்ததில், இயேசு தீர்ப்பின் மொழியைப் பயன்படுத்தினார்.

வேறு சில எடுத்துக்காட்டுகள்:
ரோமை நூற்றுவர் தலைவரின் பணியாளர் (லூக் 7:2-10)
கதரேனியப் பேய்பிடித்தோர் (மத் 8:28-33)
பத்து தொழுநோயாளர், அவர்களில் ஒருவர் சமாரியர் (லூக் 17:12-19)

7. யூதர்களின் மனங்களில், ரோமை அதிகாரத்தை அகற்றிவிட்டு தாவீதின் மண்ணக அரசைக் கட்டியெழுப்பும் மெசியாவை அவர்கள் எதிர்பார்த்திருந்தனர். இயேசு ‘‘கடவுளின் அரசு’’ பற்றி அறிவித்தபோது, இஸ்ரயேலின் சுதந்திரம் மற்றும் பெருமையை மீட்டுருவாக்கும் புதிய அரசின் வருகை குறித்து அவர் பேசியதாக அவர்கள் நினைத்தனர். அவரது சீடர்கள் நினைத்ததும் அவ்வாறே!

இயேசு தமது முதல் சீடர்களைத் தம்மைப் பின்தொடர அழைத்த பொழுது, இந்த ‘‘மெசியா’’ பெரும் அரசராகவும் அரசியல் விடுதலையாளராகவும் இருக்கப் போகிறார் என்று நினைத்து, அவர்கள் தங்கள் வேலைகளை விடுத்து உடனடியாக அவரைப் பின்தொடர்ந்தனர் (மத் 4:20). அவரைப் பின்தொடர்வது அழகிய அரசியல் பணிக்கு சிறந்த படிக்கல்லாக இருக்கும்.

இக்காரணத்தால், சீடர்கள் அடிக்கடி தங்களிடையே வாக்குவாதத்தில் ஈடுபட்டனர் (மாற் 9:33-37; மத் 20:20-28; லூக் 22:24). இயேசு ஒரு நாள் அரசராகும்போது அரசவையில் உயர்ந்த அமைச்சர் பதவிகளை யார் பெறுவது என்பதே அவர்கள் நடுவே நிகழ்ந்த விவாதமாக இருந்தது. அவர்களின் பெற்றோர்களும் இந்த நோக்கத்திற்காகத் தலையிட்டது போன்றும் தெரிகிறது. யாக்கோபு, யோவான் ஆகியோரின் தாய் இயேசுவிடம் வந்து, ஒரு நாள் அவரது அரசில் தமது இரு மகன்களுக்கும் இரண்டு உயர்ந்த பதவிகளை வழங்குவதை உறுதி செய்ய முயற்சித்தார், ஒருவர் அவரது இடப்பக்கமும் மற்றவர் அவரது வலப்பக்கமும் இருக்க வேண்டும் (மத் 20:20-28).

இயேசு கழுதையின் மீது அமர்ந்து எருசலேமுக்குள் நுழைந்த பொழுது (தற்போது குருத்து ஞாயிறு என்று அறியப்படும் நாளில்), சீடர்கள் மிகவும் உற்சாகமாய் இருந்தனர் (லூக் 19:28-

40). அரசியல் கூற்றான “தாவீதின் மகனுக்கு ஓசன்னா” என்று கத்துமாறு கூட்டத்தினரை அவர்கள் தூண்டினர், ஏனெனில் இஸ்ரயேலின் அரசாட்சியை தாவீதின் மகனே மீட்பார் என்று பழைய ஏற்பாட்டு இறைவாக்கு கூறியது. வெற்றியின் அடையாளமாக அவர்கள் ஒலிவக் கிளைகள் மற்றும் குருத்தோலைகளைக் கைகளில் ஏந்தி அசைத்தனர். இயேசு எருசலேமில் நுழைந்ததற்கு சுமார் 200 ஆண்டுகள் முன்னதாக, யூதா மக்கபே (ஹாஸ்மோனிய அரசமரபில் ஒரு யூத குருவின் மகன்) சிரியர்களுக்கு எதிரான விடுதலைப் போரில் வென்று அரசரானார். அவர் தமது வெற்றி மற்றும் இஸ்ரயேலின் விடுதலையின் அடையாளமாகக் குருத்தோலையை பயன்படுத்தினார்.

மேல்மாடி அறையில், பாஸ்கா இரவு உணவின்போது, மற்ற அனைவரின் பாதங்களைக் கழுவுவது யார் என்பது குறித்து சீடர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர் (யோவா 13:1-17). இயேசு சீடர்களின் பாதங்களைக் கழுவத் தொடங்கிய பொழுது, இயேசுவின் தாழ்ச்சியான செயலைப் பேதுரு வன்மையாக எதிர்த்தார், ஏனெனில் இயேசு ஒரு பணியாளரைப் போலன்றி ஒரு அரசராக நடக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்த்தார். இஸ்ரயேலின் அரசர் என்ற தமது சொந்த நிலையைக் குறித்து இயேசு தெளிவின்றி இருந்தால், இயேசு அவருக்கு ஏற்கெனவே வாக்களித்திருந்த பேதுருவின் நிலை கேள்விக்குள்ளாகும் (மத் 16:18).

இயேசு கைது செய்யப்பட்டு, ரோமை அதிகாரிகளின் சிறைபிடிப்பில் இருந்து தம்மை விடுவித்துக்கொள்ள வலுவற்றவராக இருந்த பொழுது பேதுரு உணர்ந்த ஏமாற்றத்தையும் விரக்தியையும் கற்பனை செய்யுங்கள். அவரது சொந்த அரசியல் நோக்கம் தற்போது எதிர்நோக்கு அற்றதாக மாறியது. இந்த விரக்தியே இயேசுவைத் தெரியாது என்று பேதுரு மறுதலிக்கக் காரணமாக அமைந்தது (மத் 26:33-35; மாற் 14:29-31; லூக் 22:33-34; யோவா 13:36-38).

ரோமை அதிகாரிகளை வீழத்தி இயேசு அரசராவார் என்று இஸ்ரயேல் கொண்டிருந்த எதிர்நோக்கும், தங்களது அரசியல் எதிரிகளை வீழ்த்தும் ஆற்றல் அவருக்கில்லை என்பதை மக்கள் கண்டபோது விரக்தியாக மாறியது. எதிர்நோக்கு ஏமாற்றமாக மாறியது, தொடர்ந்து சினமாக மாறியது. முந்திய ஞாயிறு இயேசுவின் எருசலேம் வெற்றி நுழைவைக் கொண்டாடிய அதே கூட்டத்தினர், தற்போது அவரை சிலுவையில் அறையுமாறு கேட்டனர் (மத் 27:22; மாற் 15:13-14; லூக் 23:21; யோவா 19:6).

தெளிவாக, இயேசுவின் நோக்கத்தை இஸ்ரயேல் மக்கள் முழுவதும் தவறாகப் புரிந்து கொண்டிருந்தனர்.

8. தமது சொந்த மக்களுடனான இத்தகைய அனுபவங்களாலும், கடவுளால் குறிக்கப்பட்ட நேரம் குறித்த தம் அறிவாலும், இஸ்ரயேலர் மற்றும் எல்லா மனிதர்களின் பாவங்களுக்காகத் தம்மைப் பலியாக்கும் நேரம் மிக அருகில் உள்ளது என்பதை இயேசு அறிந்திருந்தார். என்ன நிகழ வேண்டும் என்பதற்கான முக்கியத் திட்டங்களை அவர் ஏற்கெனவே தயாரித்திருந்தார்.

9. எர்மோன் மலை அடிவாரத்தில், கலிலேயக் கடலின் வடக்கில் ஏறத்தாழ 48 கிலோமீட்டரில் அமைந்துள்ள பிலிப்பு செசரியாவில் இயேசு தமது சீடர்களுடன் நிகழ்த்திய உரையாடல் குறித்து மத்தேயு 16:13-20ல் வாசிக்கவும். இயேசு இவ்விடத்துக்கு தமது சீடர்களை அழைத்து வந்தது அவர்களுக்கு அதிர்ச்சியூட்டும் அனுபவமாக இருந்தது, ஏனெனில் அது யூதர்கள் பொதுவாகத் தவிர்க்கின்ற ஓரிடம். ஆனால் ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காகவே இயேசு அவர்களை அங்கு அழைத்து வந்தார்: தமது சீடர்களுக்கு தெளிவாகத் தம் அடையாளத்தை வெளிப்படுத்தும் பொருட்டு யூதக் கூட்டத்தினரிடம் இருந்து விலகியிருக்க.

பிலிப்பு செசரியா பெரிய மலைப்பாறையின் மீது புதிதாகக் கட்டப்பட்ட நகராக இருந்தது. கிரேக்கர்களின் நாள்களில் இருந்தே, அது பிறசமய வழிபாட்டு இடமாக அறியப்பட்டிருந்தது. அவர்கள் பான் என்ற கிரேக்க தெய்வத்தை வழிபட்டதால் பானியஸ் என்று கிரேக்கர்கள் அந்நகரை அழைத்தனர், ஏரோது பிலிப்பு அந்நகரை மீண்டும் கட்டியெழுப்பத் தொடங்கியதும் தமது பெயரால் அதற்கு பிலிப்பு செசரியா மறுபெயரிட்டான். எனினும், இயேசுவின் காலம் வரை அங்கு பான் வழிபாடு தொடர்ந்தது. இங்கு இயேசு பேதுருவோடு ஒரு சுவையான உரையாடலை நிகழ்த்தினார்.

அ) இயேசு பேதுருவிடம் சொன்னார், “நீ பேதுருவாக இருக்கிறாய், இந்தப் பாறையின் மீது என் திருச்சபையைக் கட்டுவேன்” (மத் 16:18). ஏரோது பிலிப்பு தமது நகரை இந்தப்

பாறையின் மீது கட்டியது போன்று, தமது திருச்சபையை பேதுருவின் திருப்பணி மீது கட்டப் போவதாக இயேசு பேதுருவிடம் சொன்னார். இன்னுமதிகமாக, பிலிப்பு செசரியாவின் கீழிருந்து புறப்பட்ட மிகப்பெரிய ஊற்று யோர்தான் நதிக்கு தண்ணீரை வழங்கியது, அதையே இஸ்ரயேல் மக்கள் தண்ணீருக்காகச் சார்ந்திருந்தனர். பேதுருவின் திருப்பணி மீது கட்டப்பட்டத் திருச்சபை இஸ்ரயேல் மக்களுக்கும் அவர்களைத் தாண்டியும் ஆன்மிக வாழ்வின் ஆதாரமாக இருக்கும். இது பேதுருவின் அலுவலுக்குத் தொடக்கமாக இருந்தது, அதனால்தான் திருத்தூதர்களின் தலைவராக பேதுரு ஏற்கப்படுகிறார். கடவுளது மக்களின் ஆயர்களாகத் தங்கள் அலுவலுக்கு அழைக்கப்பட்டத் திருத்தூதர்கள் எல்லாரும் பேதுருவோடு ஒன்றித்திருக்க வேண்டும். அவ்விதமே, இன்று, திருச்சபையின் எல்லா ஆயர்களும் (திருத்தூதர்களின் வழிவந்தோர்) திருத்தந்தையோடு (பேதுருவின் வழிவந்தவர்) ஒன்றித்து, தூய கத்தோலிக்கத் திருச்சபை மீதான அவரது தலைமையின் கீழ் செயல்பட வேண்டும் (கதிம 882).

*கதிம 880:* ‘‘கிறிஸ்து பன்னிருவரை நியமித்தபோது, அவர் அவர்களை ஒரு குழும வடிவில் அல்லது நிரந்தர அவையாக ஏற்படுத்தினார், அவர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பேதுருவின் தலைமையில் அதை வைத்தார்.’’

ஆ) பேதுருவின் திருப்பணி மீது தாம் கட்டும் இந்த திருச்சபையின் மீது ‘‘பாதாளத்தின் வாயில்கள் வெற்றிகொள்ளா’’ என்றும் பேதுருவுக்கு இயேசு வாக்களித்தார் (மத் 16:18). பான் வழிபாட்டினர் அங்கு உருவான குகையைப் கீழுலகின் வாயிலாகவும், குளிர்காலத்தில் அங்கு இனப்பெருக்க தெய்வங்கள் வாழ்ந்ததாகவும் (அவை வசந்தகாலத்தில் மண்ணகம் திரும்ப வேண்டுமெனவும்) நம்பினர். இந்தக் குகை ‘‘பாதாளத்தின் வாயில்’’ என்று அறியப்பட்டது. அதன் விளைவாக, அவர்கள் விபச்சாரம் போன்ற முறைகேடான பாலியல் செயல்களை அங்கு வழக்கமாகச் செய்தனர். இந்த தீய தெய்வங்களுக்காக மனிதர்களும் கொல்லப்பட்டு பலியாக இந்த குகைக்குள் எறியப்பட்டனர். ஆனால் கீழுலகின் வாயில்கள் தமது திருச்சபைக்கு எதிராக வெற்றிகொள்ளாது என கிறிஸ்து பேதுருவிடம் வாக்களித்தார்.

திருச்சபை ஒருபோதும் வழுவில் விழாது என்பதன் இறை உறுதிப்பாடாக இந்த வாக்குறுதி இருந்தது, இயேசு ஏற்கெனவே அதை வாக்களித்துள்ளதால் ‘‘திருச்சபையின் மேய்ப்பர்களுக்கு விசுவாசம் மற்றும் அறநெறிகளின் விடயங்களில் வழுவாநிலை அருள்கொடையை கிறிஸ்து வழங்கியுள்ளார்’’ (கதிம 890). இந்த வழுவாநிலை திருச்சபைக்கு கடவுளின் கொடையாக இருக்கிறது. திருத்தந்தை ஒரு பாவியாக, மற்றெவரைப் போல தவறு செய்யக் கூடியவராக இருந்தாலும், திருத்தந்தை என்றத் தம் நிலையில் (*எக்ஸ் கதீட்ரா*) இருந்து விசுவாசம் மற்றும் அறநெறிகளைக் கற்பிக்கும் பொழுது அவர் வழுவாதவாறு தூய ஆவியார் தடுக்கிறார். அவர் இந்த இறைக் கொடையை திருச்சபையின் பொருட்டு செயலாக்குகிறார். திருத்தந்தையும் ஆயர்களும் உலகளாவிய சிறப்பு கூட்டத்தில் (பொதுச் சங்கம்) ஒன்றுகூடி விசுவாசம் குறித்து ஏதோவொன்றை முறைப்படி அறிவிக்கும் பொழுதும் அது உண்மையாகிறது. எனினும், ஆயர்கள் தனிப்பட்ட விதத்தில் கற்பிக்கும் விசுவாசம் திருத்தந்தை மட்டுமே கொண்டுள்ள வழுவாநிலை சலுகை கொண்டதன்று.

இ) அடுத்து, இயேசு பேதுருவிடம் சொல்கிறார், ‘‘விண்ணரசின் திறவிகளை நான் உன்னிடம் தருவேன்: நீ மண்ணகத்தில் கட்டுகிறவை அனைத்தும் விண்ணகத்திலும் கட்டப்படும்; நீ மண்ணகத்தில் அவிழ்க்கிறவை அனைத்தும் விண்ணகத்திலும் அவிழ்க்கப்படும்’’ (மத் 16:19). திருத்தந்தைக்குரிய அடையாளத்தின் மிக முக்கியப் பகுதியாகத் திறவிகள் இருக்கின்றன, ஏனெனில் பேதுருவுக்கும் அவரது வழிவருவோருக்கும் விண்ணரசின் திறவிகளை இயேசு வாக்களித்தார். பேதுருவின் திறவிகள் திருத்தந்தை முத்திரையில் எப்போதும் காணப்படும். பொன் மற்றும் வெள்ளித் திறவிகள் கட்டுவதற்கும் அவிழ்ப்பதற்குமான பேதுருவின் ஆற்றலை அடையாளப்படுத்துகின்றன. அவை வத்திக்கான் கொடியிலும் ஒவ்வொரு திருத்தந்தையின் தனிப்பட்ட மரபுரிமை சின்னத்திலும் காணப்படுகின்றன. விண்ணக அதிகாரத்தால் மாண்புற்ற மண்ணகத் திருச்சபை மீதான ஆன்மிக அதிகாரம் மற்றும் ஆட்சி அதிகாரத்தை இந்தத் திறவிகள் அடையாளப்படுத்துகின்றன. இந்த வார்த்தைகளால், இயேசு தமது அதிகாரத்தை பேதுருவின் அலுவலில் முதலீடு செய்துள்ளார், இதன் காரணமாக, விண்ணரசு மற்றும் திருச்சபைக்கு இடையே நெருக்கமானத் தொடர்பு இருக்கப்போகிறது. இதனால்தான் கடவுளின் மக்கள் மீது மேய்ப்பராகவும் உச்ச ஆட்சியாளராகவும் இருக்கும் பொறுப்பை பேதுருவுக்கும் அவரது வழிவந்தோருக்கும் இயேசு வழங்கியுள்ளார்.

இத்தருணத்தில் இருந்து இயேசு தமது சீடர்களிடம் விரைவில் நிகழவுள்ளத் தமது இறப்பைக் குறித்து நேரடியாகப் பேசத் தொடங்குகிறார்.

10. மத்தேயு 17:1-13ஐ வாசிக்கவும் (மாற் 9:3-13 மற்றும் லூக் 9:28-36லும் இது உள்ளது). ஆறு நாட்களுக்குப் பிறகு, இயேசு பேதுரு, யாக்கோபு, மற்றும் யோவானைத் தம்மோடு தாபோர் மலைக்கு அழைத்துச் சென்றார். இந்த மலை மீது, அவர்கள் முன்பாக இயேசு தோற்றம் மாறினார். இந்நிகழ்வு மூன்று ஒத்தமை நற்செய்திகளிலும் காணப்படுவதால், அது நற்செய்தி எழுத்தாளர்களுக்கு மிக முக்கியமானதாக இருந்திருக்க வேண்டும்.

இயேசு தமது மூன்று நெருக்கமான சீடர்களை அழைத்துக்கொண்டு ஓர் உயர்ந்த மலைக்குச் சென்றார், இது மிக முக்கியமான ஏதோவொன்று நிகழப்போவதைக் குறித்தது, ஏனெனில் மலை (விவிலியத்தில்) எப்போதும் வெளிப்பாட்டின் ஓரிடமாக இருந்தது. மோசே மற்றும் எலியாவுடனான இயேசுவின் உரையாடலின் முக்கியத்துவத்தை திருத்தூதர்கள் மெய்யாகப் புரிந்து கொள்ளவில்லை. மோசே சட்டத்தின் பிரதிநிதியாகவும், எலியா இறைவாக்கினர்களின் பிரதிநிதியாகவும் (ஏனெனில் இறைவாக்கினர்கள் எல்லாரிலும் பெரியவராக இஸ்ரயேலர் அவரைப் பார்த்தனர்) இருந்தனர். அவர்களுடனான இயேசுவின் உரையாடல், இயேசுவை சட்டம் மற்றும் இறைவாக்கினர்களின் நிறைவாகக் காட்டுகிறது. “இவரே என் அன்பார்ந்த மகன்” என்ற கடவுளின் குரல் இயேசுவின் இறைத்தன்மையை உறுதி செய்கிறது. இவை யோர்தான் நதியில் இயேசு திருமுழுக்கு பெற்றபோது கடவுள் பேசிய அதே வார்த்தைகளாக இருக்கின்றன (மத் 3:17).

மத்தேயு நற்செய்தி மிக முக்கியமான ஒன்றை முன்னிறுத்திக் காட்ட முயற்சிக்கிறது: எருசலேமில் துன்புறுத்தப்பட்டு சிலுவையில் அறையப்பட இருக்கும் இயேசு, விண்ணகத்தில் இருந்து இறங்கி வந்த மாட்சியின் ஆண்டவராகவும் இருந்தார்.

| **தோற்ற மாற்றம்** (மத் 17:1-8) | **சிலுவையில் அறைதல்** (மத் 27:27-56) |
|---|---|
| ஒற்றுமைகள்: | |
| “ஆறு நாட்களுக்குப் பிறகு” (17:1) | “ஆறாம் மணியில் இருந்து” (27:45) |
| மூன்று சாட்சிகள் இருந்தனர் (17:1) | மூன்று சாட்சிகள் இருந்தனர் (27:55-56) |
| இயேசு கடவுளின் மகன் (17:5) | இயேசு “கடவுளின் மகன்” (27:43) |
| அவர்கள் “மிகவும் அஞ்சினர்” (17:6) | அவர்கள் “மிகவும் அஞ்சினர்” (27:54) |
| வேற்றுமைகள்: | |
| இயேசு மற்றவர்களை அழைத்துச் சென்றார் (17:1) | மற்றவர்கள் இயேசுவை அழைத்துச் சென்றனர் (27:27) |
| இயேசு மலைமீது உயர்த்தப்பட்டார் (17:1) | இயேசு சிலுவையில் உயர்த்தப்பட்டார் (27:35) |
| தனிப்பட்ட வெளிப்பாடு (17:1) | பொதுவில் கோரநிலை (17:1) |
| ஒளி (17:2) | இருள் (27:45) |
| ஆடைகள் ஒளிர்ந்தன (17:2) | ஆடைகள் கிழிக்கப்பட்டன (27:28,35) |
| இயேசு மாட்சி பெற்றார் (17:2-6) | இயேசு இழிவை ஏற்றார் (27:27-31) |
| எலியா தோன்றினார் (17:3) | எலியா தோன்றவில்லை (27:47-49) |
| இயேசு அருகில் மோசேயும் எலியாவும் (17:3) | இயேசு அருகில் இரு கள்வர்கள் (27:38) |
| இயேசுவை கடவுள் ஒப்புக்கொள்கிறார் (17:5) | இயேசுவை கடவுள் கைவிடுகிறார் (27:46) |
| சீடர்கள் மதித்துப் பணிந்தனர் (17:6) | வீரர்கள் கேலியுடன் பணிந்தனர் (27:29) |

பேதுரு (அநேகமாக மற்ற இரு சீடர்களும்) மலை மீது தங்கியிருக்கவும், தங்கள் திருப்பணி முழுவதும் அவர்கள் சந்தித்த சவால்களில் இருந்து புத்துணர்வின் மாறுதலாகவும் ஓய்வு அளிப்பதாகவும் இருந்த இந்த ஆறுதல் மற்றும் மாட்சியின் தருணத்தில் தொடர்ந்திருக்கவும் விரும்பினார். ஆனால் மனிதர்களின் பாவங்களுக்காக துன்புற்று இறப்பதற்காக எருசலேம் செல்வதை இயேசு தமது நோக்கமாகக் கொண்டிருந்தார். அவரது மண்ணக எய்துபணி இன்னும் முழுமை பெறவில்லை!

11. இயேசு நான்கு முதன்மை நோக்கங்களுக்காக வந்தார் (கதிம 457 - 460):
அ) நமது பாவங்களுக்காகத் தம்மைப் பலியாக அளித்து நம்மை மீட்பதற்காக;
ஆ) தமது வார்த்தைகள் மற்றும் செயல்கள் வழியாக, தந்தையின் அன்பை நமக்கு வெளிப்படுத்த;
இ) நமக்கு தூயநிலையின் மாதிரியாக இருக்கவும், நாம் எப்படி கடவுளின் பிள்ளைகளாக வாழ்வது என்பதைக் காட்டவும்;

ஈ) கடவுளின் வாழ்வில் நம்மைப் பங்கேற்கச் செய்ய, இது தொடக்கம் முதலே கடவுளின் நோக்கமாக இருந்தது.